**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No. 32 of 2016

Deposition of D.W. 1

Name of the Witness: திரு.சாரதி

Date : 01.09.2025

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

7) தாவா 3ம் இன சொத்து தாத்தா, பாட்டிக்கு சொந்தமானது. அப்பாவிற்கு வாய்மொழி பாகபிரிவினையில் ஒதுக்கப்பட்டது. 3ம் இன சொத்திற்கான பட்டா என் அப்பா பெயரில் தான் உள்ளது. என்னிடம் காட்டப்படுவது தான் அந்த பட்டா 164 அதற்கான சர்வே எண் 117/22 அந்த பட்டா **வா.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த சொத்தில் ஓட்டு வீடுள்ளது. அந்த ஓட்டு வீடு என்னுடைய சுவாதீனத்தில் உள்ளது. 3ம் பிரதிவாதிக்கு 1984ல் திருமணமானது. 3ம் பிரதிவாதியின் கணவர் கர்நாடக மாநிலம் பங்காருபேட்டையை சேர்ந்தவர். 3ம் பிரதிவாதியும் அவரது கணவருடன் எங்களுடனே இருந்து விட்டார். எங்கள் பூர்வீக சொத்திலே தங்கியிருந்தார்கள். இந்த விவரத்தை எனது எதிருரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியிருக்கிறேனா என்றால் எனது வழக்கறிருக்கு தான் தெரியும், 3ம் இன சொத்தில் இருக்கும் வீட்டிற்கு மின் இணைப்பு யார் கட்டி வருகிறார்கள் என்றால் அதில் மின் இணைப்பே இல்லை. வீட்டுவரி மட்டும் நான் கட்டி வருகிறேன்.

8) 3ம் பிரதிவாதி தாவா 3ம் இன சொத்தில் அவரது கணவருடன் வசித்து வருகிறார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி கோவிந்தன் என் சகோதரி மாலதியின் கணவர். மாலதிக்கும் கோவிந்தனுக்கும் பிறந்தவர்கள் தான் 5 முதல் 7 பிரதிவாதிகள். மாலதியின் வாரிசு சான்றிதழை நான் தாக்கல் செய்யவில்லை. 4 முதல் 7 பிரதிவாதிகள் தான் மாலதியின் வாரிசு சான்றிதழில் காட்டப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. என் சகோதரி மாலதி இறந்து விட்டதால் 4 முதல் 7 பிரதிவாதிகளுக்கு தான் பாகம் போகவேண்டும் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி இந்த வழக்கிற்கு தேவையில்லாத தரப்பினர் என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும், அவரும் மாலதியின் வாரிசு என்றால் சரியல்ல.

9) 2ம் வாதியின் மனைவி காயத்திரி ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். காயத்திரி பேரில் இருந்த சொத்துக்களையும், 1ம் வாதி பேரில் உள்ள மல்லாபுரத்தில் உள்ள சொத்துக்களையும் வழக்கில் சேர்க்க வேண்டும் என்று இடைநிலை மனு எண் 149/2018 மனு போடப்பட்டு அந்த மனு 15.11.2019 அன்று அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த உத்திரவின் பேரில் சென்னை உயர்நீதிமன்றத்தில் சிஆர்பி 513/2020 மனு போட்டு 29.11.2024 அந்த மனு அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த மனுவில் உயர்நீதிமன்றம் எங்களை கவுண்டர்கிளைம் மனு போட்டு சொத்துக்களுக்குண்டான நீதிமன்ற கட்டணம் கட்ட வேண்டும் என்றும், வாதிகளுக்கு பதில் தாக்கல் செய்ய உரிமையுள்ளது

என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கூடுதல் நீதிமன்ற கட்டணத்தை செலுத்திவிட்டேன். தனியாக கவுண்டர்கிளைம் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தனியாக கவுண்டர்கிளையம் செய்யாமல் அந்த சொத்துக்களில் உரிமை கேட்க இயலாது என்றால் சரியல்ல.

*10)* காயத்திரி பெயரிலும், *1ம்* வாதியின் பெயரிலும் உள்ள சொத்துக்கள் என்றாலும், அது குடும்ப சொத்து இல்லை என்பதால் அதில் பாகம் கேட்க எங்களுக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. காயத்திரி பெயரிலும், *1ம்* வாதி பெயரிலும் உள்ள சொத்துக்கள் குடும்ப சொத்துக்களை விற்று அந்த வருமானத்தில் இருந்து தான் வாங்கப்பட்டது என்பதற்கு ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல, ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்.

*(தொடர் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)*